தொழிற்சாலையை ஆரம்பிக்கலாம், அதிலே தலைவராக இருந்து நடத்தலாம். நாம் தென்னார்க்காடு மாவட்டம் பன்ருட்டியில் ஏற்படுத்தியிருக்கிற இந்த தொழிற்சாலைக்கு திரு. கிருஷ்ண மூர்த்தியைப் புரமோட்டராகக் கொண்டு 5 கோடியில் ஆரம்பிக்கப்பட்ட தொழிற்சாலை. அதற்கு அவர்தான் தலைவராக இருப்பார். அரசு கொடுக்கிற பணத்துக்கு, அரசு போடுகிற மூலதனத்துக்கு அரசுத் துறையில் இருந்து ஐ. ஏ. எஸ் அதிகாரி ஒருவர் டைரக்டராக இருப்பார். ஏற்கனவே சொன்னது தமிழ்நாடு செய்தித்தாள்—நியூஸ்பிரின்ட் தொழிற்சாலை பொதுத் துறையிலே வருகிறது. அந்தத் தொழிற்சாலைக்கு ஏற்கனவே சேஷசாயி பேப்பர் நிறுவனத்தால் நடத்தப்பட்டு வருகின்ற காரணத்தாலும், அதைப்போல ஒரு பெரிய அளவிலே ஒரு தொழிற்சாலையை அவர்களே நடத்த ஏற்கனவே விரும்பி இருந்த காரணத்தாலும், தமிழ்நாட்டைப் பொறுத்தவரையிலும் அவர்தான் எக்ஸ்பர்ட் என்று என்னாலே நிச்சயமாக சொல்ல முடியும். ஏனென்றால் பெரிய அளவிலே ஒரு காகித ஆலையை அவர் நடத்தி வருகின்றவர். அவரை, அவருடைய தொழில் நுட்ப அறிவை, அவர் கற்றிருக்கின்ற, உலக நிறுவனங்களோடு பெற்றிருக்கின்ற தொடர்புகளை எல்லாம் பயன்படுத்தி அந்தத் தொழிற்சாலையை முழுமையாகக் கொண்டு வருவதற்காகத்தான் இவ்வாறு அவரைத் தலைவராக போட்டிருக்கிறோம். இதற்கு மத்திய அரசு உட்பட, மத்திய அரசு அமைச்சர்கள் உட்பட, சம்பந்தப்பட்டவர்கள் அத்தனை பேர்களும் அதற்கான அனுமதியை வழங்கி இருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள் 761, 772, 773 ஆகியவை மாண்புமிகு அமைச்சர்களின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்பெறுகின்றன. வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

(2) உரிமைப் பிரச்சனை

சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதியில், ஓர் உறுப்பினர் தாக்கப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவை உரிமை மீறல் குறித்த பிரச்னை. 2-3-1982 அன்று மாண்புமிகு உறுப்பினர் திரு தீர்த்தராமன் அவர்கள் பேரவையில் அவை மீறல் குறித்த ஒரு பிரச்சினையை எழுப்பினார். அதன் மீது எனது தீர்ப்பு பின்னர் அளிக்கப்படும் என்று நான் கூறியிருந்தேன். இப்போது எனது தீர்ப்பு அளிக்கப்படுகிறது.

26-2-1982 அன்று உறுப்பினர்கள் தங்கும் விடுதியில் திரு. தீர்த்தராமன் அவர்கள் தாக்கப்பட்டார் என்பதால் இப் பிரச்சினை எழுப்பப்பட்டது. பேரவையில் அப்போது மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டது—''நான் சட்டமன்ற உறுப்பினர் கடமையை நிறைவேற்ற முடியாமலும்—தடுக்கும் வகையிலும் என்னைக் கொலை செய்ய முயன்றார்கள். மேலும் இந்த நிகழ்ச்சி நான் சட்டமன்ற உறுப்பினர் என்கிற முறையில் கடமையைச் செய்வதற்கு ஊறு செய்யும் விதத்தில் நடந்து இருக்கிறது''.

மாண்புமிகு உறுப்பினர் தாக்கப்பட்டதன் நோக்கம் சாட்சியங்களை விசாரித்து ஆய்ந்து முடிவெடுக்க வேண்டும். உறுப்பினர் விடுதி அவையின் அமைப்பு எல்லைக்குள் சேர்க்கப்படவில்லை. ஆயினும் அவர் விடுதியில் இருந்தது பேரவையின் கூட்டங்களில் கலந்து கொள்வதற்காகத்தான் என்பதில் ஐயமிருக்க முடியாது.

எனவே, இப்பிரச்சினை குறித்து நன்கு ஆராய வேண்டிய அவசியம் இருப்பதாக நான் கருதுவதாலும், அவை உரிமைக் குழு தான் இதைச் செய்ய முடியும் என்று நான் கருதுவதாலும், பேரவையின் 255-வது விதியின் கீழ் எனக்குள்ள விசேஷ அதிகாரத்தைப் பயன்படுத்தி, இப்பிரச்சினையை ஆய்ந்து அறிக்கை அளிக்க அவை உரிமைக் குழுவிற்கு அனுப்பி வைக்கிறேன்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

3. தகவல் கோரல்

106-வது விதியின் கீழ் அளிக்கப்பெற்ற அறிக்கைகளின் மீது விவாதம்

திரு. க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 2, 3 நாட்களுக்கு முன்னால், அரசாங்கம் 106-வது விதியின் கீழே ஒரு அறிக்கையை இங்கே வைத்த நேரத்தில், அந்த விதியின் கீழ் அரசாங்க அறிக்கையாக வைக்கப்படுகிற காரணத்தால் அதை எதிர்கட்சிகள் வாதிக்க வேண்டிய வாய்ப்பு இப்போது இல்லை என்று சொன்னாலும் விவாதிக்க உரிமை தர வேண்டும் என்று எதிர்கட்சிகளின் சார்பிலே பலரும் கேட்டு, தாங்களும் விவாதிப்பதற்காக ஒரு நாளை, ஒரு நேரத்தை